www.tamilarangam.net

# நெருப்பையும் சுடும் நெஞ்சின் வேதனை



செங்கனல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நெருப்பையும் சுடும் நெஞ்சின் வேதனை

கவிதைத் தொகுதி
கவிஞர் செங்கனல்

ஈழ சூரியன்
வெளியீட்டு மையம்
அறை இல; 23
135, ஒத்தவாடை தெரு,
கோடம்பாக்கம்
சென்னை-600 024

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

○ நெருப்பையும் சுடும் நெஞ்சின் வேதனை
○ கவிதை ○ கவிஞர் : செங்கனல் ○ முதற்பதிப்பு
புரட்டாதி 1985 ○
○ உரிமை : ஆசிரியர்க்கு ○ வெளியீடு : ஈழசூரியன் ○
○ அச்சு : சௌத்ரி பிரிண்டர்ஸ், சென்னை ○
○ ஓவியம் : சேய் ○
நூல் விலை 5 ரூபா

## சமர்ப்பணம்

சுதந்திர வானில் உயரப் பறக்க
என்னால் என்றும் முடியவே இல்லை
எத்தனை முயற்சிகள் நானெடுத்தாலும்
அத்தனை முறையும் தோல்வியே கண்டேன்.

அடிமை இருளில் மூழ்கித்தவித்து
விடிவுக்காக நான் ஏங்கியபோது
ஒருசிறு பொறியாய் அறிவொளி பிறந்தது.
எனது வண்ண இறக்கையில் ஒன்று
சூம்பிக் கிடப்பது உணர்வினில் பட்டது.

சூம்பிய எனது வண்ண இறகினை
வருடியபோது பெண்ணெனப்பட்டது.

சூம்பிய இறகாய்ப் பெண்ணிருக்கும்வரை
சுதந்திர வானில் மானிடம் பறக்குமா
நிதந்தர இன்பம் மண்ணிலே பூக்குமா?

எனது ஆன்ம வீணையை எடுத்து
சூம்பிய இறக்கையை விரிப்பதற்காக
பூபாளராகம் நான் மீட்டுகிறேன்.

எனது மண்ணும் எனது மக்களும்
அவரது அழுகையும் அவலமும் தொழுகையும்
பாயும் இரத்தமும் சாயும் உடல்களும்
மீண்டும் உயிர்பெறும் பணியினைப்புரிய
சூம்பிய இறக்கையை விரிப்பதற்காக
எனது ஆன்ம வீணையை எடுத்து
பூபாளராகம் நான் மீட்டுகிறேன்.

சூம்பிய வண்ண இறகாம் பெண்ணை
சூரியக் கதிராய்ப் பரவச் செய்ய
களத்தில் உழைத்து உயிர்கொடுத்தோர்க்கும்
களத்தில் நின்று உழைப்பவருக்கும்
இச்சிறுகவிதைக் கொத்து ''சமர்ப்பணம்''

—செங்கனல்—

தமிழ்த் தேசிய ஆவண சுவடிகள்

www.tamilarangam.net



# விழிகளிலே ஞான ஒளி பாய அவள் நின்றாள்

கலைமகளைக் கல்விக்கு
கடவுளெனப் போற்றிடுவோர்
கலை கமழும் விழாவெடுத்து
களி உவகை கொள்ளுகிறார்.

வெள்ளைத்தாமரைப் பூவினிலே
கள்ளமில்லா மனதுஎழில்
புன்னகையாய் எதிரொலிக்க
பால்பொழியும் ஆடையவள்
மேனியினை அழகு செய்ய
மென்விரல்கள் வீணையினை
மீட்டுகின்ற பான்மையிலே
கண்குளிரக் காட்சி தரும்
கலைமகளைப் போற்றிடுவார்.

பெண்ணினத்தின் பெருமையினை
பொன்முடியாய் உயர்த்துகின்ற
கண்ணிறைந்த காவியந்தான்
கலைமகளுக்கு விழாவெடுத்தல்.

*

ஆயிரத்துத் தொளாயிரத்து
எண்பத்திநான்கு ஐப்பசித்திங்கள்
பூசை செய்யும் அன்றயினிலே
தலைமகனை ஒரு தகப்பன்
கலைமகளைப் போற்றியொரு
பாமாலை இசைப்பதற்கு
பணிகின்றார் பக்குவமாய்.

மாலையிலே மதுமயக்கம்
மதிமயக்க மனைவிமக்கள்
விழிகலங்க அடித்துதைத்து
தூசணைகள் பேசுவதில்
சாதனைகள் செய்த தந்தை
முதன் நாள் தாயையும் தன்னையும்
அடி உதையால் பூசை செய்த
காட்சியவள் பாவையிலே.

நாட்டுமக்கள் அடிமைகளாய்
வாடுகின்ற வேளையிலே
நாடுகின்ற விடுதலையில்
நல்ல பங்கு அளிப்பதற்கு
மனங்கொண்டு பணிபுரிய
திடங்கொண்ட வேளையிலே
தடைக்கல்லாய்ப் பெற்றோர்கள்
தலையிட்டுத் தடுத்ததையும்,

பழு நிறைந்த வேலையினை
முடித்துவிட்டும் இரவினிலே
சுதந்திரத்தின் உணர்வையூட்டும்
புத்தகங்கள் படிப்பதற்கும்
பெற்றோர்கள் தடைசெய்ய
எரிமலையாய் மனங்குமுறி
உரிமைப்போர் தொடுப்பதற்கு
இருநாட்கள் உண்ணும்
நோன்பிருந்து வாடியதையும்
அவள் நினைத்துப் பார்க்கிறாள்.

இந்த நிலை கண்டு நெஞ்சு
பொறுக்காது நெருப்பான
பெருமூச்சை மொழியாக்கி

www.tamilarangam.net



''கலைமகளைப் போற்றியினி
பாமாலை சாற்ற மாட்டேன்''
என்ற மன வைரத்தில்
மௌனத்தில் தவமிருந்தாள்

''கலைமகளைப் போற்றியொரு
பாமாலை சாற்றிடுவாய்''
என்ற தந்தை அதட்டலையும்
பொருட்டாக மதிக்காது
மௌனத்தில் தவமிருந்தாள்

சினங்கொண்ட நாகம்போல்
மனஞ்சினந்து கண்சிவந்து
மகள் பேசும் மௌனமொழி
கருத்தறிய முடியாமல்
பார்க்கின்றார் அவள் தந்தை.

விரிந்தகுழல் தோழசைய
கைகட்டிக் கண்மூடி
மனங்கொண்ட உரிமைப்போர்
இலட்சியத்தின் உருவம்போல்
கலைமகளாய் மௌனத்தில்
அவள் ஆழ்ந்து நிற்கின்றாள்.

பாமாலை பாடு என்று
மீண்டும் பல தடவை
மிரட்டுகின்ற தந்தைக்கு
''கலைமகளைப் போற்றியினி
பாமாலை சாற்றமாட்டேன்''
என்ற நெஞ்ச ஆலயத்தின்
ஆத்மாவின் மணிஒலிப்பு
அந்த அறை முழுவதையும்
எதிரொலித்து அவள் தந்தை



ஆணவத்தின் நெஞ்சத்தையும்
ஊடுருவிச் சென்றது.

கலைமகளின் படத்தினிற்கு
நறுமணப் பூ சாற்றியகை
சாம்பிராணிக் குச்சியினை
குத்திவைத்துக் கொழுத்தியகை
குத்துவிளக்குத் திரிகளுக்கு
முத்து ஒளி ஏற்றியகை
சந்தணக் குழம்பெடுத்து
பொட்டுவைத்த தந்தையின்கை
தன் மகளின் முகத்தினிலே
முஷ்டிக்கைக் குத்துகளால்
ஆறுதிக்க அபிசேகம்
செய்தாரே பல தடவை

வைரக்கல் தூண்போல
வைரமனங் கொண்ட அவள்
பல தடவை அடிபட்டும்
பலமாகத்தான் நின்றாள்.

துகிலுரிந்த துச்சாதனன்
மெய்சோர்ந்து தளர்ந்ததைப் போல்
அடிக்குமேல் அடியடித்து
அசையாத மகளைக் கண்டு
ஆதிக்கக் கோபவெறி
தளர்ந்து மனம் சோர்வடைந்தார்

இலட்சியத்தில் இமயம் போல்
இறுகிவிட்ட பாறையவள்
முகத்தினிலே குத்திவிட்டு
மதமடங்கித் தோற்றதந்தை
மனதினிலே சரணடைந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உயிர்பெற்ற கலைமகளின்
விக்கிரகம் போலஅவள்
வெற்றியினைச் சாற்றுகின்ற
விழியினிலே ஞானஒளி
பாய அவள் நின்ருள்.

# களத்தினிற்குப் பெண்கள் வரட்டும்

பால்மொழியும் புடவைகட்டி
நிலவொளிபோல் தாமரையில்
நீ நின்று தவம் புரிந்து
நிலைநாட்டக் கருதியது
நான்நினைத்துப் பார்க்கிறேன்.

புதுமை எழில் பொலிகின்ற
புன்னகையாள் இளமையிலே
கொண்டவனைப் பிரிந்ததனல்
கட்டுகின்ற வெண்புடவை
கண்டு மனம் பரிதவித்து
வண்ணநிறப் புடவைகட்டி
வாழ்வுபெற வேண்டுமென்றே
வெண்புடவை கட்டிநின்று
நீண்டதவம் செய்கின்ருய்.

பொன்னுடனே பெண்ணை எடை
போடுவோர்கள் பொன்குறைந்தால்
பெண்ணை உடன் தள்ளுவோர்கள்
செய்ய நீதி கண்டு மனம்
சகிக்காது வாய்திறந்து
செப்பிவிட்டால் நீதிமொழி
அடங்காப் பிடாரியென்று
அட்டகாசம் போடுவார்கள்.

பெண் என்ருல் இவர்களுக்கு
வியாபாரச் சரக்காகும்
பொன்னுதரச் சிரிக்கின்ற

www.tamilarangam.net



பொங்குஎழில் மங்கையரை
புகையிலை தன்னுடனே
ஒப்பிட்டுப் பேசிடுவார்.

சிற்றுண்டிச் சாலையிலே
தேவியுன்னைத் தூக்கிவைத்து
தூபங்கள் காட்டுவோர்கள்
பாலுணர்வைத் தூண்டுகின்ற
பாவையரின் படங்களையும்
தூக்கிவைத்துத் தொழுகின்ற
தீயகுணம் போக்குதற்கோ
நீண்ட தவம் செய்கின்றாய்.

கல்விக்குத் தெய்வம் என்று
உன்னை வைத்துப் பூசிக்கும்
கற்றவர்கள் தகமைக்கு
கடுகளவும் இடங்கொடாது
சாதிமத இனவெறியின்
ஆளுகைக்கு இரையாகி
மாணவர்க்கு சிறுமைசெய்யும்
மடமையினைப் போக்குதற்கோ
நீண்டதவம் செய்கின்றாய்.

மென்விரல்கள் மீட்டுகின்ற
வீணையிலே பூபாளம்
உன்விரல்கள் எழுப்பட்டும்
புண்ணியத்தைக் கொன்றுவிட்டு
பெண்ணினத்தை அடிமையாக்கும்
சட்டங்கள் சம்பிரதாயங்கள்
சத்தியத்தின் நெருப்பினிலே
சுட்டெரிக்கும் விடுதலைப்போர்
களத்தினிற்குப் பெண்கள் வரட்டும்.



மேடுபள்ளம் நிறைந்திருக்கும்
மேன்மைகெட்ட சமுதாயம்
மேன்மையுறும் சமத்துவத்தை
நாட்டுதற்குப் பணிபுரிய
பெண்கள்அணி திரளட்டும்.

www.tamilarangam.net



# உலகம் இதைக் கேட்கட்டும்

கரும்பைவிட இனிப்பான
பண்புநிறை தோழமையார்
கரும்பு தின்ற கதை பற்றி
விரும்புகின்ற கவிதையினை
அரும்புகின்ற விடுதலைப்பூ
சூடுதற்கு விளைகின்ற
களத்தினிலே வடிக்கின்றேன்

நீறுபூத்த நெருப்பாகப்
பொறுமையுடன் இருந்தவரே
கோடு போட்ட வீடுகளைத்
தாண்டிக் களம் வந்தவரே
மனம் திறந்து சிலவார்த்தை
உங்களுடன் பேசுகிறேன்.

காதில் வந்து குத்துகின்ற
காதிதினிலே வந்த சில
களங்கத்தைக் குழைத்த உந்தன்
ஒழுக்கத்தைப் பற்றியது.

வீட்டுச்சிறை விட்டுவெளி
வந்த ஒளித் தீபங்களே
கூட்டினிலே பூட்டிவைத்துக்
குத்தியும்மை இரசித்தவர்கள்
கோடுபோட்டு வைத்தவர்கள்
கொள்கை இனிச் சாகுமடி



பெண் அடிமைக் கொள்கையினி
செத்தொழிய வேண்டுமென்றால்
தீபங்களாய் மட்டுமல்ல
செந்தீயாய்ச் சினந்தெழுந்து
சுட்டெரிப்பாய் கொடுமைகளை

ஊருக்காய் உழைக்க வந்த
உம்மிடத்தில் ஒழுக்கநெறி
ஊற்றெடுத்துப் பாயட்டும்
யாருக்கும் அஞ்சாது
பெருமையோடு நீர் வாழ
ஊரும்மைப் போற்றட்டும்
உலகமிதைக் கேட்கட்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாழ்வுதான் வேள்வியா?

காலப்பேரலை வந்து மோதிடும்
சாலம் வந்ததில் கலங்கிடும் வீடுகள்
கோலம்இழந்து கொள்கைமாறி
காலம் கெட்டதாய் பெற்றோர் நினைப்பர்.

பெற்றோர்கட்டளை பொடிப்பொடியாக
அண்ணன்மார்களின் ஆணைநெருங்கிட
போட்ட கோட்டுள் பெண்களை வைத்து
வாட்டியகுடும்ப ஆட்சியும் உடைய...

முள்ளாய்க்குத்திப் பெண்களை வாட்டிய
சம்பிரதாயங்கள், சமூகச்சுவர்களை
அனைத்தையும் உடைத்துச் சத்திரம் படைத்த
தேசியப்பேரலை வீச்சிலே பெண்கள்
தேச விடுதலைப் போர்க்களம் நோக்கி
வீசப்படுவதை யார் தடுப்பார்கள்?

வீடுசுமத்திய வேலைப்பழுக்கள்
சமூகம்போட்ட முள்ளுவேலிகள்
அனைத்தையும் வெறுத்துப் பொறுத்துக்கிடந்த
அணங்குகளுக்குத் தேசியப்பேரலை
வழியாய் அமைந்தது விடுதலைதேட.

ஒன்றும்அறியா உணர்ச்சியில்பொங்கிய
கன்றுக்குட்டியாய்த் துள்ளும் மனதுடன்
கன்னியர் கூட்டமாய்த் தேசவிடுதலை
களத்தினில் தூக்கி வீசப்பட்டனர்.



எந்தவீடும், எந்தக் கோடும்
எவரது ஆணையும் எச்சரிக்கையும்
சம்பிரதாயமும் சமூகச் சுவரும்
இவர்களை இனிமேல் என்னசெய்வது?

இவர்கள் இனிமேல் என்ன செய்வது?
இவர்களை இனிமேல் என்னசெய்வது?
என்பதை இவர்கள் எண்ணிடவேண்டும்
இவர்களை ஏற்றவர் எண்ணிடவேண்டும்.

நிந்தைகள்செய்த நிலப்பிரபுவமும்
முள்ளாய்க்குத்திடும் முதலாளியமும்
தனியார் உடமைத் தொழிற்சாலைகளும்
இனியார் உடமை ஆகிடவேண்டும்?

அடுக்களைச்சிறையை உடைத்தெறியும் வரை
ஒடுக்கப்படுகின்ற பெண்களின் விடுதலை
கிடைக்கப்பெறுமா தேசவிடுதலை
போர் இதை ஊட்டுமா அறிவினை மூட்டுமா?

இவர்கள் இதனை உணராவிட்டால்
தேசவிடுதலைப்போரலை ஓய்ந்தபின்
தேடியசெழுமை வாழ்வு கிட்டுமா?
வாடிய பயிராய் வாழ்வுதான் வேள்வியா?

www.tamilarangam.net



# புதுயுகப் பெண்கள்

மேடையில் பெண்மையை
போற்றிடும் பித்தரே!
விளம்பரப் பலகையில்
களங்கமேன் பெண்மை!

கவரிமானைக் காட்டி நீங்கள்
காசுக்காய்ப் பெண்மையை
மாசுபடுத்திக் கெடுப்பதென்ன?
அச்சடித்த காகிதத்தின்
உச்சலாபம் மனதைத் தூண்ட
இச்சையான கோலங்களில்
பச்சையாகப் பெண்ணை விற்கும்
அச்சமில்லா நெஞ்சுடையீர்!

துகிலுரிந்து தசைகாட்டி
தேட்டம் பண்ணும்
கெட்ட துச்சாதனர்களே!
உங்கள் குருதியை தலையில் பூசி
உள்ளம் மகிழ நீராடும் வரை
எமது கூந்தல் கலைந்தே இருக்கும்!

சினங்கொண்டு சீறி வந்த
கொடும்புலி தலையுங் கூட
முறங்கொண்டு கலைத்தாவீர
புறங்கண்ட பெண்கள் நாம்
நெருப்பாக எழுகின்றோம்
அறங்கொன்று புலியாகி

அழுகின்ற ஆடவரே!
அறிவென்ற முறத்தாலே
அடித்தும்மைத் துரத்தும் வரை
கைகளிலே வளையல்கள்
இருக்காது ஒலிக்காது.

அரியாசனத்தினிலே
கொலுவிருந்து செங்கோல்
நெறியிழந்த பாண்டியனின்
உயிர் பறித்த கண்ணகிகள்
நாங்கள் வருகின்றோம்.

மூலசன ஆசனத்தில்
மூர்க்கமாய் அமர்ந்து கொண்டு
எங்கள் உரிமைகளை
பறித்தெடுத்த பாண்டியரே!
வரலாற்றுச் சிலம்புடனே
வருகின்றோம் வழக்குரைக்க
பெண்ணென்றால் அடிமையென்று
பொய்யுரைக்கும் உம்மவரை
வீழ்த்துகின்ற நாள்வரைக்கும்
எமது கண்கள் சிவந்தேயிருக்கும்.

பின் குஞ்சி முன்னெழும்
பேதைகள் நாங்களில்லை,
கொண்டவன் வரும் வரைக்கும்
உண்ணாமல் பார்த்திருக்கும்
மண்கட்டி நாங்களில்லை,
கோவலனைத் தண்டிக்க
வெண்துகில் கட்டிய
வெண்சங்கு மனத்தாள்
மாதவி நாங்களில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொழுநோயால் வாடிய தன்
கணவனது கட்டளைக்கு
வணங்கிநின்று அன்னவளை
கூடையிலே சுமந்து
விலைமாதின் வீடுசென்ற
நளாயினி நாங்களில்லை,
எங்களை அடிமைகளாய்
ஏலத்தில் கூறிவிற்க
எந்த அரிச்சந்திரன்களையும்
நாங்கள் விடமாட்டோம்.

எங்களை விருப்பங்களை
எங்களிடம் கேட்காமல்
தங்கள் விருப்பம்போல்
எங்களைப் பணயமாக
வைத்துச் சூதாட
எந்தத் தருமர்களையும்
நாங்கள் அனுமதியோம்.

பிறக்கப் போகும் புதுயுகத்தின்
புதுமை பொலி பெண்கள் நாம்
இன்ப ஊற்றும் சுதந்திரத்தை
அள்ளிப் பருகவே எழுகின்றோம்
வீட்டுச் சிறையினுள்ளே
இடர் பட்டு மடிவதினும்
தேச விடுதலைப் போரில் மடிவதில்
சுதந்திர தாகம் தணித்திடுவோம்.

தீபங்களாக ஒளிர்ந்திடுவோம்
தீமையின் ஆட்சி ஓங்குமெனில்
தீயாய் மாறி எரித்திடுவோம்,
நறுமணம் வீசும் பூக்கள் நாம்



சிறுமை எம்மைத் தீண்டுமெனில்
குத்தும் முள்ளாய் மாறிடுவோம்,

மாலைப் பொழுதின் தென்றல் நாம்
மாசு படுத்த யாரெழினும்
புயலாய் வீசி வீழ்த்திடுவோம்
அன்பும் அமைதியும் சமத்துவமும்
பூமியை ஆளும் நாள் வரைக்கும்
நாங்கள் உறங்கப் போவதில்லை.

www.tamilarangam.net



# எமக்குத் தேவை

எமக்குத் தேவை—
தலையணை மந்திரங்களல்ல,
குருசேத்திர
உபதேசங்கள்.
எங்கள்
அங்கங்களைப் பற்றிய
தங்க வர்ணனைகளல்ல
தங்கமாய் நாங்கள்
மதிக்கப்படுவது.

எமக்குத் தேவை—
காதல் பொழுது போக்குகளல்ல
காலத்தின் தேவைக்கேற்ற
கடுமையான பணிகள்,
கால் சிலம்பு மூக்குத்தி
கைவளையல் கழுத்தணிகளல்ல,
வாகனங்கள் துப்பாக்கிகள்
பாவிக்கப் பழகுவது.

எமக்குத் தேவை—
அடுப்படி வேலைகளில்
அடைபட்டுக் கிடப்பதல்ல,
ஆண்களுடன் சமனாய்
சமூகப் பணி புரிவது.



எமக்குத் தேவை—
உங்கள் கழுகுப் பார்வைகளல்ல
துணிவை மூட்டுகின்ற
கண்ணியமான பார்வைகள்,
தனிவழியே அச்சத்துடன்
நெஞ்சிடித்துச் செல்வதல்ல,
அச்சமின்றித் தனிவழியே
பக்குவமாய்ச் சென்றுவரல்,
உங்கள் குரங்குச்சேட்டைகள்
இச்சைப் பேச்சுகளல்ல,
உங்கள் சகோதரிகளாய்
நாங்கள் மதிக்கப்படுவது,

எமக்குத் தேவை—
எமக்குக் கணவர்களை
விலை கொடுத்து வாங்குவதல்ல,
எமது கணவர்களை
நாங்கள் தேர்ந்தெடுக்கும்
உரிமையை நாங்கள் பெறுவது.

எமக்குத் தேவை—
பழமையென்றும் அறியாமை
இருளுக்குள் புதையுண்டு
பேதைகளாய் அடிமைகளாய்
மடமையிலே வீழ்த்துகின்ற
வீட்டுச் சிறையல்ல,
அறியாமை இருளோட்டி
ஆன்மாவை எழுப்புகின்ற
அருங் கல்விச் சாலைகள்.

எமக்குத் தேவை—
எங்கள் ஆன்மாக்கள்

www.tamilarangam.net



தொல்லப்பட்டு எங்களை
நடைப்பிணங்களாக்கும்
விபச்சார விடுதிகளல்ல
உழைத்து உரிமையுடன்
உன்னதமாய் வாழ
உதவும் நல்ல தொழிற்சாலைகள்.

எமக்குத் தேவை—
வேலைப் பளுவைச் சுமந்து
வீட்டிற்குள் விரக்தியுற்று
மாடுகளைப்போல் வாழ்வதல்ல
உழைப்புக்கேற்ற ஊதியம்
களைப்புக்கேற்ற ஓய்வு
தென்றல் தவழும் மாலையில்
வெள்ளிபூத்த நீலவானில்
வெண்ணிலவு தவழ்ந்துவர
வெள்ளை மணல் கடற்கரையில்
துள்ளி ஓடிப் பாங்கியுடன்
உள்ளமது பூரித்தல்.

## உயிர் பெற்றெழுந்து வருவாயே

கல்லானாலும் அவன் கணவன்
புல்லானாலும் அவன் புருஷன்
கட்டளை உனக்கா பெண்ணே
மண்ணானாலும் அவள் மனைவி—வெறும்
மரமானாலும் அவள் மனைவி
ஆணுக்கில்லை ஏன் பெண்ணே?

சேற்றில் மிதித்து நீரில் கழுவ
சமூகம் மதிக்கும் ஆண்தனை
சறுக்கிவிழுந்த உனக்குக்கூட
சமூகம் சவக்குழி பறிப்பதேனோ?

ஆணொரு பாதி பெண்ணொரு பாதி
தத்துவம் வைத்தார் பெண்ணே
தத்துவம் தன்னை வாழ்க்கையில் கொள்ள
தயக்கம் எதனால் பெண்ணே?
தாய்க்குலம் என்று மகுடமிட்டார்
தரணியில் உனக்குப் பெண்ணே?
தாங்க முடியாய்ச் சுமையை உந்தன்
தலையில் வைத்தாரேன் பெண்ணே.

அழன்று எரியும் அடுப்பாங்கரையின்
அரசியாக்கி அடிமை கொண்டார்
அழன்று உழலும் காமத்தீயை
அடக்கும் கருவியாய் உனைக்கொண்டார்.

www.tamilarangam.net



உலகம்போற்றும் உத்தமர்களை
உயிர் தியாகம் செய்தவர்களை
உயர்சிந்தனைச் செல்வர்களை
உலகம் உய்திட நீ பெற்றும்
உந்தன் தளையேன் ஒழியவில்லை?

உள்ளத்தை உரத்துச் சொல்லிவிட்டால்
உள்ளதை வெளியில் செப்பிவிட்டால்
உனக்கு அடக்கம் இலையென்பார்
பிணக்குக் காரி யென உரைப்பார்.
தந்தை, கணவன், சோதரர்கள்
விந்தை இவர்கள் செயல்பாராய்
மந்தை போலே நீ வாழும்
நிலையை நினைத்தேன் பார்ப்பதில்லை.

கண்ணே மணியே நீயென்பார்
பொன்னே முத்தே எனச்சொல்வார்
பிறப்பால் ஒத்த உயிருன்னை
பொருளால் அளப்பவர் யார் பெண்ணே?

உந்தன் அடிமை விலங்கொடிக்கும்
உரிமை உந்தன் கையிலுண்டு
உரிமை பெறத்தான் போராடு
உந்தன் குலத்தை ஒன்றுக்கு
விடி ின் ஒளியில் விளையாட
விழிப்பாய் திரள்வாய் துணிவாக.

ஆணுக்குப் பெண் சமமென்றே
பூண்பாய் கொள்கை நகையாக
உலகம் உய்வு பெறுவதற்கே
உந்தன் உதிரம் நீ சிந்து
மடிந்து அழியும் மணியில்தான்
பல்லாயிரம் மணிகள் பொலிந்திடுமே.



அடிமையாக உழல்வதிலும்
விடிவை எண்ணி உழைத்திடவே
வீட்டுக்கொரு பெண் வேண்டுமடி.

உத்தம பெண்ணே வரவேண்டும்
உன்மத்தர் ஆயிரம் சொல்லட்டும்
உன்னை எள்ளி நகைக் கட்டும்
உரிமைக் குரலை நீ உயர்த்து
உடையும் அடிமை விலங்கென்றே
உறுதி குலையாய் நெஞ்சாய் நீ
உயிர் பெற்றெழுந்து வருவாயே!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இடியினை மணியாய் அடி

கண்ணகியைக் கற்புக்கு
இலக்கணமாய் வைத்தவர்கள்
ஓங்கி நிற்கும் மலைகளிலே
ஓடுகின்ற மேகத்திலே
ஏறிநின்று நல்லவர் போல்
மின்னலைத் தீபம் காட்டி
இடியினை மணி அடித்து
எழுப்புவார் ''கற்பு'' என்று.

உயிரை விடப் பெரிது கற்பு
உயிரை விட்டும் காத்திடுவாய்
மயிரை நீத்து விட்ட பின்பு
உயிரை விடும் கவரிமானாய்
வாழ்பவளே கற்பரசி
வரையறைகள் வைத்து விட்டார்.

பொங்குகடல் போல் எழுந்து
''கற்பு'' என்று கத்தியவர்
காமுகன் எனது கற்பை
சூறையே ஆடிச் செல்ல
எரிமலை போல் எழுந்து
காமுகன் சாம்பராக
கூடுவார் என்று எண்ணி
கூவினேன் அவரை நோக்கி.

நெஞ்சில் உரங்கெட்ட
பேதை அவர்களுக்கு
ரோச நரம்பு இல்லை,
எந்தன் நிலை கண்டு
மரமும் அசைந்துருகும்
இவர்களோ அசையாத
கருங்கல்லைப் போலிருந்தார்.

நெஞ்சில் உரங்கெட்ட
பேதைகளாய் நாமிவரை
எண்ணிடுதல் பெருந்தப்பு
இவர்கள் மா கொடியவர்கள்
என்பதெந்தன் அனுபவிப்பு.

நான் தவறி வீழ்ந்தபோது
வான்இடிய இவரெழுந்து
மின்னலைத் தீபம் காட்டி
இடியினை மணி அடித்து
''கற்பினை இழந்த மாது
நற்பலன் கெட்ட பேதை''
என்றெலாம் வசைமகுடம்
சூட்டியே தெரு இழுத்து
சினந்திடும் அலையைப் போல
சீறியே இவர் எழுந்து
சிறுமைகள் பலபுரிந்தார்.

தொட்டாலே தோஷம்
நிழற்பட்டாலே தீட்டு
என்ற மனப்பான்மையிலே
என்னை இவர் தூசணித்து
எந்தன் எதிர்கால வாழ்வை
சவக்குழிக்குள் தள்ளிவிட்டார்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த நிலை எனக்கு இன்று
நாளை உனக்கென்று
நம்பிடுவாய் பெண்குலமே
நலம் பேண யார் வருவார்?

போர்வெறியைத் தடுப்பதற்கு
வெளிநாடுகளில் பெண்கள்
நிர்வாண ஊர்க்கோலம்
சென்ற கதை நீ அறிவாய்.

நிர்வாண ஊர்வலங்கள்
நீ நடத்து இவர் நாண
புயலாகிச் சங்காகி
ஒப்பாரி நீ படிப்பாய்
அடுப்படியில் சமைப்பதையும்
நிறுத்திவிட்டு வீதிக்குவா
ஊடலையும் கூடலையும்
உதறிவிட்டு வாவெளியில்
மின்னலைத் தீபம் காட்டு
இடியினை மணியாய் அடி
பூமுகத்தின் ஆத்மாவை
பூக்க நீ செய்திடுவாய்.

# மின்னல் கொடி போல் ஒளிசிந்தி வருவாய்

கருமேகம் நிழல் விரிக்கும்
கருங் குடையும் நிழல் கொடுக்கும்
கடமையிலே சளைக்காது
குடைபோல கிளைபரப்பி
உட் குவிந்து நிழல் கொடுக்கும்
''செர்ரி'' மரம் வெண் சிவப்பு
முத்துக்கள் ஒளிர்வது போல்
தித்திக்கும் கனி கொடுக்கும்.

விடியலிலே கதிர் முளைக்கும்
வேளைக்கு முன்னதாக
விழித்து விட்ட பறவையினம்
விடிவுக்காய் இசைமிழற்றும்.

பகல்வேளை ஒளித்திருந்து
விடியலிலே ஓடி வந்து
இதழ் விரித்து எழில் சிந்தி
மதுவடிக்கும் பூக்களிலே
பனி கொஞ்சி மகிழ்ந்திருக்கும்
களவியலில் விடிவைத்தேடும்.

பூவடிக்கும் மதுக்குடிக்க
பாடிவரும் வண்டினங்கள்
தேன் சுவைத்து மெய்மறக்கும்.

www.tamilarangam.net



பூப்படுக்கை தடவிவழும்
குளிர் சுமந்த மென்காற்று
கொடி செடியில் நடனமிடும்.

''செர்ரி'' மர அயலினிலே
செவ்விதழ்கள் சிரித்திருக்கும்
மணிவாழை அழகு காட்டும்.
கொல்லர் உலேயினிலே
கனிந்து சிவந்திருக்கும்
இரும்புக்கம்பி போலமணி
வாழைப்பூ தண்டிருக்கும்.

வெண்பச்சை அழகு காட்டும்
''இபில் இபில்'' மரத்தினிலே
காகிதத்துத் தோறணங்கள்
போல அதன் காய்கள் தூங்கும்.
''கீகீ''யென இசையெழுப்பி
பசுங்கிளிகள் வந்துவிழும்
கொவ்வைக் கனி அலகாலே
கோதி உள்ளே பருப்பெடுத்து
சுவை பார்த்து மகிழ்ந்து செல்லும்.

பச்சைமஞ்சள் நிறம் மார்பில்
பட்டுஒளி மினுமினுக்கும்
கரும்பச்சை இயற்கைஎழில்
தும்பியின்வால் போல் சொண்டு
நீண்டிருக்கும் சிறுகுருவி
'செர்ரி' மரக்கிளேயினிலே
வெண்சிவப்புச் செர்ரிப்பழம்
சுவைப்பதிலே களித்திருக்கும்.

''கொண்டைக்கிளறு''ச் சோடிவந்து
பரபரத்துக் கிளேகள்தாவும்



வட்டச்செங்கண் கருங்குயிலும்
கொட்டமடித்து இசை பொழியும்
கிட்ட அழைத்து சோடியதை
''செர்ரிப்பழம்'' சொண்டெடுத்து
அணைத்தூட்டும் அன்போடு
செர்ரிமரக் குடையின்கீழ்
ஆட்சிசெய்யும் பாங்கினிலே
தாவிநுழைந்து கிளேகளிலே
கூவிக்குயில்கள் களித்திருக்கும்.

இதயத்தை அள்ளுமிந்த
காலேஎழில் காட்சியிலே
மூழ்கி நான் சுழியோடும்
வேளேயிலே உன் நினேவு
முட்டியதால் என்தோழி
நான் நிமிர்ந்து பார்க்கிறேன்.

''காலேமுதல் மாலேவரை
சமயலறைச் சிறையினிலே
பூட்டிவைத்துப் போய்விடுவார்.
நெருப்போடு போராடி
நெருப்பாக மனம்வேக
செருப்பாகத் தேய்கின்றேன்
நாள்தோறும் மாற்றமில்லா
வேலேயிலே மனஞ்சலிக்கும்.

புகையும் அடுப்பிணைப்போல்
புகையுது மனமெரிந்து
மூக்கினுள்ளே புகை நுழைந்து
நெஞ்சினைக் கெரிக்கச்செய்யும்
புகையினிலே சிவந்து கண்கள்
கண்ணீரை தான் வடிக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெண்காயம் வெட்டுகையில்
கண்ணெரியும் நீர்வடியும்
பச்சை மிளகாய்பிள்க்க
கைவிரல்கள் அழல்கின்றன
பட்ட இடம் தொட்ட இடம்
அத்தனையும் தான் எரியும்

அங்கமது வியர்வையிலே
பிசுபிசுத்து, அவிந்திருக்கும்
ஆடையும் அவிந்து புளித்திருக்கும்
நாள்தோறும் மாற்றமில்லா
வேலையிலே மனஞ்சலிக்கும்.

என் தேவை என் ஆவல்
என் கனவு என் இதய
ஏக்கமதைப் பகிர்ந்து கொள்ள
புரிந்து கொள்ள யாருமில்லை
இதயப்பானைக்குள் எந்தன்
தேவைகள் விரக்தியின்
நெருப்பினிலே அவிகிறது.''

உன் நெருப்பு வார்த்தைகளின்
அனல் மூச்சு என் முகத்தை
இப்பொழுதும் சுடுகிறது
வட்டக்கண் கருங் குயில்
சொண்டில் பழம் கொத்தி
சோடிக்கு ஊட்டியதை
வேடிக்கையாக நினைக்கின்றேன்.

'செர்ரி' மரக்குயில் போல
சுதந்திரமாய் நீ பறக்க
அறிவென்னும் கனியெடுத்து
அன்புடனே நான் கொடுப்பேன்.



பெண்ணடிமைத் தனத்தினிலே
கண்ணிழந்து தவிக்கின்ற
உனைப் போன்ற மாதர்களின்
துன்பியல் காவியத்தை
இன்பியலாய் மாற்றிடவே
நீ எழுந்து வந்திடுவாய்.

துன்ப இசை வடித்த
என் தோழிக் குயிலே
இன்ப இசை வடிப்பதற்கு
என்னோடு களத்திற்கு
நீ வந்து சேர்ந்திடுவாய்.

பெண்ணை அடிமை கொள்
சமூகத்தை மாற்றிட
ஈழவிடுதலைக் களத்திற்கு வா
வீட்டுச் சிறை உடைத்து
நாட்டிற்காக நல்லபங்களிக்க
மின்னல் கொடிபோல்
ஒளி சிந்தி வருவாய்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வெளிச்சம் கொடுக்க வெளியே வருக

அடுப்படிச் சிறையுள்
மூடப்பட்ட விளக்குகளே!
வெளிச்சம் கொடுக்க
வெளியே வருக!

அடைப்பட்ட கதவை
உடைத்து நொருக்கி
நெருப்பிலே இடுக,
தடுப்பவர் கைகளையும்
தறித்து வீழ்த்துக.

ஏனெனில் உங்கள்
விளக்கு வெளிச்ச
வழிகாட்டல் இன்றி
விழி இருள் நிறைய
வழி தடுமாறி
அலைபவர் பலபேர்.

எங்கள் வீட்டுக்
கூரைகளின் மேலே
உங்கள் வெளிச்சம்
பிரகாசிக்கட்டும்
அப்பொழுதுதான் எங்களை
மூடியுள்ள அடிமை இருள்
எங்களை விட்டு அகன்று போகும்.

## எடுத்துச் சொல்வோம்

துணைநின்று தோள்தந்து
துணிவோடு உறவாடும்
தணியாத சுதந்திர
உணர்வோடு நடமாடும்
என்னன்புத் தோழி!

"போராளி ஒருவனை
வீட்டிலே வைத்துப்
பராமரிப்பதனால்
விடுதலைப் போரில்
பங்களித்திடுவீர்"
என நாம் கேட்கையில்
விடுதலை வேண்டியும்
வீரம் படராத
நெஞ்சம் படைத்தவர்
கோழைச் சிரிப்பினிலே
மின்னிடும் வார்த்தைகள்
நெஞ்சை வருத்திடும்.

இனவெறி இராணுவச்
சோதனை ஈழத்தில்
பெருகிட ஒவ்வொரு
மூலைமுடுக்கிலும்
இராணுவம் வந்து
புகுந்து விளையாடும்
வேளையில் தளர்ச்சியில்

www.tamilarangam.net



அஞ்சிடும் நெஞ்சங்கள்
மேனி நடுங்கிடும்
வேளையில் இம்மியும்
அஞ்சிடா நெஞ்சினாய்
உனது வீட்டிலே
போராளிகளை வைத்துப்
பேணிய உந்தன்
வீடு நமக்கோர்
அடர்ந்த காட்டி.

காட்டினில் கூட
பாதுகாப்பில்லை.
''ஹெலிக் கொப்டர்'' சுற்றி
பொட்டொளி பாச்சி
தேடுதல் நடத்துது,
எதிரிகள் தீர்க்கும்
வேட்டுக்கள் கேட்குது
வீட்டிற்குள் வீர
தியாகமலையென
உயர்ந்தாய் எங்கள்
நெஞ்சில் சிலையென
நிலைத்திருப்பாய் நீ
உலகிற்கு இதனை
எடுத்துச் சொல்வோம்.

# சரிந்து அழியட்டும் இந்த பரிவில்லாச் சமுதாயம்

எருசலேம் குமாரத்திகளே
ஏன்தான் அழுகிறீர்கள்?
பாறை வழியில் சிலுவை சுமக்கும்
கிறிஸ்து பிரானுக்காகவா?

சமகாலக் கிறிஸ்துவின்
சத்தியக் குரல் கேட்கிறது
'எனக்காக அழாதீர்கள்
சீதனச் சிலுவையைச் சுமந்து
சீரிளமை கெட்டுவாழும்
உங்களுக்காகவும் உங்கள்
உடன் பிறப்புகளுக்காகவும்
சாம வேளையில் உறக்கமின்றியே
அழுது கரையும் காக்கைகள்போல்
அழுங்கள் அப்பேரொலிதான்
அந்தகார இருள் சூழ்ந்த
பெண்ணடிமைச் சமுகத்தின்
புன்மைக் காதுகளைத் திறக்கும்.

கோணிச் சாக்குடுத்திச்
சாம்பலிலே தவமிருங்கள்
சரிந்து அழியட்டுமிந்தப்
பரிவில்லாச் சமுதாயம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கோடிபணம் கேட்டுப் பெண்ணை
கொள்ளவரும் கொடியவர்க்கு
கொட்டும் தேனீயாய்க்
குட்ட ஒரு சங்கம்
கூடி அமைத்திடுவாய்
சங்கம் வளர்த்த தமிழ்ச்
சங்கம் போலவொன்று.

பண்டப் பொருளென
பெண்ணை மதிப்பவர்க்கு
பெண்ணைக் கொடுப்பதில்லை
என்றே முழங்குதற்கு
சங்கம் அமைத்திடுவாய்
பங்கம் அகற்றிடுவாய்
எங்கும் எருசலே வீதிகளே.

# நெருப்பையும் சுடும் எங்கள் நெஞ்சியின் வேதனை

நெருப்பையும் சுடும் எங்கள்
நெஞ்சின் வேதனை
கொஞ்சும் பசுமையையும்
கருக்கிப் போடும்
தண்புனல் ஆற்றையும் வரட்டி
வெண்மணல் கொழிக்கவும் செய்யும்.

அள்ளி வழங்கும் பெண்களின்
கடிய உழைப்பினுக்கு
கிள்ளித் தெளிக்கும் சமூகத்தின்
சுரண்டல் தனத்திற்கு
ஆடவர் அடக்கு முறைக்கு
கொள்ளியும் வைக்கும்.

எங்கள் உரிமையைப் பறிக்கும்
உங்கள் அரசசையும்
அதன் அடிவருடிகள்
அத்தனை பேரையும்
அதன் அமைப்பு அதனையும்
நீறுய்த் திரிக்கும்.

இனவெறிப் பருந்தென
தினமொரு கோழிக்

www.tamilarangam.net



குஞ்செனக் கனித்தமிழ்
பெண்களைப் பிடித்து
நெருடியே அவர்களின்
கற்பையும் பறித்து
கசக்கியே பிழிந்து
இன்னுயிர் பறிக்கும்
இனவெறி இராணுவப் பேய்களே!
உங்களை உருக்கி
கானிலே சாக்கடை
நீரென ஓடச்செய்யும்.

அவர்கள் எங்கள்
அன்புச் சகோதரிகள்
அபிலாசைகள் நிறைந்தவர்கள்
வசந்தத்திற்காய் கனவு காண்பவர்கள்
பாசக் குளத்திலே பூத்த
நேசத் தாமரைகள்
இனிய மணம் வீசும் மல்லிகைகள்
தென்றலில் மிதந்து வரும்
தேமாவின் நறுமணங்கள்.
விடுதலைப் போருக்கு
புத்துயிர் அளிக்கும்
புற நானூறுகள்.

இனவெறிப் புயலே!
மனமறிந்தா எங்கள் சோலையின்
இனிய நறு மலர்களைச் சிதைத்தாய்?
வாழ்க்கையின் வசந்தத்திற்கா
வாய்க்கரிசி போட்டாய்?
கறவையை இழந்த கன்றுகளும்
உறக்கமின்றிக் கதறுகின்றன.



உறங்குமா எங்கள் நெஞ்சம்
மறக்குமா பொறிக்கப்பட்ட
இனவெறிப் பதிவுகளை?
நெருப்பையும் சுடும் எங்கள்
நெஞ்சின் வேதனை.

www.tamilarangam.net



# காற்றில் சினந்திடும் தீயினைப் போல் எழு!

அன்பில்பிணைந்த எந்தன்தமிழ்
இன்னமும் என்னடி இந்த மௌனம்
இன்னமும் என்னடி இப்பெருமூச்சு
ஏக்கம் பிசைந்த உனது பார்வையின்
தேடலின் அர்த்தம் என்னடி சொல்லு?

உதிர்ந்துபோன ரோசாவைப்போல்
உனது புன்னகை எப்படி உதிர்ந்தது?
பூவும் வெள்ளியும் வெட்கிப்போன
உனது முகத்தில் துன்பஇருளின்
மேகம் படர்ந்து தங்கியதென்ன?

நெஞ்சில் நெருப்பு மொட்டாய்ப் பூத்து
துள்ளும் உன் இலட்சிய மோகந்தடுக்க
மிஞ்சி எழுந்திடும் குடும்பச்சுவரையும்
தள்ளிமிதித்திடும் சமூகக் கோட்டையும்
நையப்புடைக்கும் நம்பிக்கைகளையும்
சாம்பராய் எரிக்க முடியாமல் போனதால்
நெஞ்சம் எரிந்து குமுறியபோது......

உன்னைப்பெற்ற உனது மண்ணின்
நன்மையைக் கருதிநீ உள்ளுணர்வோடு
பொதுப் பணிபுரியப் புறப்பட்ட போது
வசைநோய் காவி மானிடப்பதர்கள்
இசைபோல் பொழிந்த பொல்லாக்கதைகள்
அவலாய் ஊரார் வாயில் அரைபட
நெருப்பில் புழுவாய்த் துயர்பட்டபோது...

நொடித்துளிகள் மணித்துளிகளாய்
நாட்கள் வளர்ந்து வருடங்களாகி
காலம் நகர்ந்து மலைபோல் வளர
நெஞ்சக் கடலில் நீந்திய காதல்
படகு இடையில் கவிழ்ந்து மூழ்கிட
கனவுலகிலே கன்னிகளித்த
பிரமையில் இருந்துநீ கண்பூத்தபோது...

சாலைப் புழுதியில் இராணுவம் உதிர்க்கும்
ஈழச் சோலையின் இனிய பூக்களை
மாலையாய் உன் மனம் கோர்த்துப் பார்க்கையில்
மக்களைப் பிரிந்த ஆயுதப் பிரியரின்
குட்டி விட்டோடும் போர் முறையாலே
எரிந்து தப்பிய உனது வீட்டையும்
சாம்பராய் எரிந்த அடுததவர் வீட்டையும்
மனக்கண்முன் நீ நிறுத்தியபோது...

வீட்டுச் சிறையும் சமூகக்கோடும்
சம்பிரதாயமும் மூடத்தனங்களும்
கயிறாய்ப் பிணைக்கும் பந்த பாசமும்
பாம்பாய் பேயாய் முள்ளாய் வேலியாய்
தேங்கும் சாக்கடை குமட்டும் நீராய்
உன்குரல் வளையை நெருடிய போது...

யாரிடம் உனது முறைபாடுகளை
ஒப்புவிக்கத் தேடிப்பார்க்கிறாய்?
இங்கே எல்லாரும் பாண்டவர்களாய்
தங்களைச் சூதில் பணயம் வைத்தவர்
உனக்காகவா குரல் கொடுப்பார்கள்?

www.tamilarangam.net

ஆடையாம் உனது மதிப்பீடுகளை
உரிகின்ற சமூக துச்சாதனனை
தடுப்பதற்காக எந்தக் கிருஷ்ணனும்
உன் குரலுக்கு வரப்போவதில்லை...

நீதான் உனக்காய்ப் போர்புரிந்திடுக
காற்றில் சினக்கும் தீயினைப் போல் எழு!
ஓரடி முன்னால் எடுத்தடி வைப்பாய்
அடுத்தடி வைக்க நான் தோள் கொடுப்பேன்.

# ஒரு நெருப்பின் சபதம்

என்னடி அக்கா உந்தன்
மண்டையில் என்னடி காயம்?
முன்வாயிலிரு பல்லுடைந்து
முகமும்அதைச் சேன்கிடக்குது.

மௌனத்தை மொழியாக்கி
கண்ணீரை முத்தாக்கி
மணித்துளிகள் விம்மியவள்
முந்தானைச் சேலையினால்
முகமதனைத்துடைத்து விட்டு
சொன்னாளே பொல்லாத
கட்டியவன் கெட்டித்தனம்.

வயதானகுமர் மூன்றும்
வளந்த இளம் குமரன்களும்
முட்டான பானையைப்போல்
கட்டி விட்ட குடிசையுள்ளே
குடும்பத்தை நடத்துகிறம்.

ஐம்பதுக்கும் மேல் வயது
ஆனபின்பும் அடங்காமல்
பகுத்தறிவு கெட்டதுகள்
வெக்கதுக்கம் விட்டதுகள்.
வயதுவந்த பிள்ளைகளும்
வீட்டினிலே இருக்குதுகள்
எண்டதையும் எண்ணாமல்
குடிவெறியில் மதிமயங்கி.

www.tamilarangam.net



தசைவெறிக்கு மனமிணங்க
நான் மறுத்து விட்டபோது
போத்திலடி விழுந்ததனுல்
பொங்கிவந்த அழ்கிதுபார்.

மீண்டும் ஒரு தடவை
மௌனத்தை மொழியாக்கி
கண்ணீரை முத்தாக்கி
சணத்துளிகள் தூவிவிட்டு...

கொண்டவனின் கட்டளைக்கு
அடங்காத கெட்டவளாம்
பிள்ளைகளைத் தனக்கெதிராய்
ஏவிவிட்டுப் பகைக்கிறனும்
சாப்பாடு தண்ணிவென்னி
குடுக்காமல் கலைக்கிறனும்
என்றிந்த ஊர்முழுதும்
சொல்லி என்றை மானத்தை
வாங்கிறவன் பிரியனே சொல்?

உழைச்சதையும் குடிச்சழிச்சு
ஏசிப்பேசி அடிச்சுதைச்சு
எந்நேரம் பாத்தாலும்
நச்சரிப்பு தூசணைகள்
பகலிரவு பாராமல்
பெண்பிரசை மதியாமல்
மானத்தை வாங்கிறியே
கண்கெட்டுப் போனவனே.

நான் பெத்ததுகள் வெய்யிலுக்கை
நாலு பணம் உடல் கருகி
உழைச்சு வந்து தாறதைத்தான்
நாங்கள் பசி ஆறுகிறம்.



வாய்க்குருசியாகக் கறி
சோறுனக்கு வேணுமெண்டால்
ஆற்றைதாலி நான் அறுக்க?

நிண்டறுக்குந் தெய்வமெண்டு
நீண்டகாலம் கேட்ட கதை
நீங்கிப்போய்ச்சு நெஞ்சைவிட்டு
இம்மட்டு நாள்மட்டும்
வாழ்க்கையிலே பட்டஇடர்
''போதும் போதும்'' எண்டாச்சு
செல்லரித்து இத்துவிட்ட
சீலையினைப் போல மனம்
இத்துப்போச்சு கரச்சலாலே.

இவ்வளவு கொடுமையையும்
இத்தனைக்கும் பொறுத்திருந்தன்
இனியுந்தான் பொறு எண்டால்
பொறுமைக்கு எல்லையுண்டு?

சினந்தெரியும் நெருப்பொன்று
மனம்நொந்து அழுவதைப்போல்
அவள்நொந்து அழுதபடி...

தம்பியாணை இருந்து பார் நீ
சத்தியமாய்ச் சொல்லுறன் நான்
ஊருலகம் பாக்க மாட்டன்
இனியொரு தடவை என்ரை
மேலில கைபடட்டும்
பொல்லாத பிரியன்ரை
கைநொருக்கி விட்டவள்ளி
எண்டுசனம் சொல்லுமினி.

தமிழ்த் தேசிய ஆவண சுவடிகள்

www.tamilarangam.net

# எனக்குப் பெயர்தான் பெண்ணா?

வழமை போலவே விடிந்தஉடனே
விளக்குமாற்றைக் கையிலெடுத்து
வீடு முற்றம் பெருக்குதற்கென்றே
விதிக்கப்பட்ட அடிமையா நான்?

விடிந்து சூரியன் வெளிவரத் தொடங்கியும்
விழிகள்மூடிப் புரண்டு படுக்கும்
படுத்தபாயினைச் சுருட்டி வைக்கவும்
பழக்கப்படாத எனது சகோதரன்


சோம்பல் முறிக்கும் காலைத்தேனீர்
அத்துடன் காலை ஆகாரம்தேடல்
அனைத்து வேலையும் சுமத்தப்பட்ட
அடிமைத் தனத்தின் பிரசவிப்பா நான்?

வரையப்படாத வேலைப்பட்டியல்
வகுத்துத் தந்த வேலையிலொன்று
காலை உணவு முடிந்த பின்னாலே
பானைசட்டி உரசிக் கழுவுதல்.

இளையவர் மூத்தவர் பெற்றோர்களினது
மனதைத் துவைக்கும் உடுபுத் துவைத்தல்
பணிக்கப்படாத கட்டளையாகி
திணிக்கப்பட்ட அடிமையா நான்?

சிட்டுக்குருவிபோல் என்னுடன் பிறப்புகள்
கட்டுக்கடங்காது ஊர் சுற்றி வருவார்
இறக்கைகள் வெட்டிய பறவையைப்போலே
பறக்கும் சுதந்திரம் இழந்தவளா நான்?

தீர்மானிக்கும் உரிமையை இழந்தவள்!
முடிவு எடுக்கும் தைரியம் பறிக்கப்பட்டவள்
அடிமைத்தனத்தைப் பொறுமையாய் ஏற்றவள்
எனக்கு உரிய பெயர்தான் பெண்ணா?



தமிழ்த் தேசிய ஆவண சுவடிகள்

www.tamilarangam.net

எமக்குத் தேவை —
தலையணை மந்திரங்களல்ல
குருசேத்திர
உபதேசங்கள்
எங்கள்
அங்கங்களைப் பற்றிய
தங்கவர்ணனைகளல்ல
தங்கமாய் நாங்கள்
மதிக்கப்படுவது.

❖ ❖ ❖

மூலதன ஆசனத்தில்
மூர்க்கமாய் அமர்ந்துகொண்டு
எங்கள் உரிமைகளைப்
பறித்தெடுத்த பாண்டியரே !
வரலாற்றுச் சிலம்புடனே
வருகின்றோம் வழக்குரைக்க.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்